RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்-52 | 25 பிப்ரவரி | செவ்வாய்க்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## மகா கும்பமேளா குறித்து அவதூறு 140 சமூக வலைதள பக்கங்கள் மீது வழக்கு!

பிராக்யராஜ், பிப்.25

மகா கும்பமேளா குறித்து இணையத்தில் தவறான தகவல்களை பரப்பியதாக 140 சமூக வலைதள பக்கங்கள் மீது உத்தர பிரதேச போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு மகா கும்பமேளா திரிவேணி சங்கமத்தில் புனித நீராடும் பெண்களை ஆபாசமான முறையில் சித்தரித்து சில சமூக வலைதள பக்கங்கள் வீடியோக்களை வெளியிட்டன. இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. இதனையடுத்து சமூக வலைதளங்களை உத்தர பிரதேச சைபர் க்ரைம் போலீசார் தொடர்ந்து கவனமாக கண்காணித்து வந்தனர்.



இந்த நிலையில் மகா கும்பமேளா தொடர்பாக தவறான தகவல்களை பரப்பியதாக 140 சமூக வலைதள பக்கங்கள் மீது எப்ஐஆர் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மகா கும்பமேளா டிஐஜி வைபவ் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

மேலும் வரும் 26ஆம் தேதியுடன் மகா கும்பமேளா நிறைவடைவதை முன்னிட்டு அன்றைய தினம் ஏராளமான பக்தர்கள் வரக்கூடும் என்பதால் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும், எவ்வளவு கூட்டம் வந்தாலும் அதை சமாளிக்க தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

62 கோடி பக்தர்கள்: மகா கும்பமேளாவுக்கு இதுவரை 62 கோடி பக்தர்கள் வந்துள்ளனர் என்று உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார். "உலகில் எந்த நிகழ்வுக்கும், இந்த அளவுக்கு மக்கள் வந்திருக்கமாட்டார்கள் என நினைக்கிறேன். இந்த நூற்றாண்டின் அரிய நிகழ்வுகளில் மகா கும்பமேளாவும் ஒன்று. இது மக்களை தங்களின் ஆன்மிக மற்றும் கலாச்சார பாரம்பரியத்துடன் மீண்டும் இணைவதற்கான தொடர்பை ஏற்படுத்தும்." என்று யோகி ஆதித்யநாத் கூறினார்

## 1000 முதல்வர் மருந்தகங்களை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்! மத்திய அரசின் மருந்தகத்தை விட 20% விலை குறைவு

சென்னை, பிப்.25



தமிழகம் முழுவதும் முதல்கட்டமாக 1000 முதல்வர் மருந்தகங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்.

இது தொடர்பாக சென்னை, தேனாம் பேட்டையில் உள்ள திமுக தலைமையகத்தில் அக்கட்சியின் மருத்துவரணி செயலாளர் நா.எழிலன் எம்எல்ஏ செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தின் 38 மாவட்டங்களில் முதல்வர் மருந்தகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார். இங்கு பிற மருந்தகத்தை ஒப்பிடும்போது மருந்துகளின் விலை 50 முதல் 75 சதவீதம் வரை குறைந்த விலையில் வழங்கப்படுகிறது. இதன் மூலம் நடுத்தரக் குடும்பத்தினரின் பொருளாதார சுமை பெரியளவில் குறையும். இத்திட்டத்தில் முதல்வர் மேற்பார்வையில் கூட்டுறவுத் துறை, தமிழ்நாடு மருந்துகள் சேவை கழகம் இணைந்து செயல்படுகிறது. மருந்தகம் அமைக்க விரும்பும் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் ரூ.3 லட்சம் மானியம் வழங்கப்படுகிறது. இதில் ரூ.1.50 லட்சம் உபகரணங்கள் கொள்முதல் செய்யவும், மீதமுள்ள ரூ.1.50 லட்சம் மதிப்பில் அதிகம் விற்பனையாகும் மருந்துகளாகவும் வழங்கப்படுகிறது. இவ்வாறு கூட்டுறவு சங்கங்கள் சார்பில் 500 கடைகளையும், தொழில் முனைவோரின் 500 கடைகளையும் முதல்கட்டமாக முதல்வர் தொடங்கிவைக்கிறார். மக்களின் மகத்தான ஆதரவுடன் இத்திட்டம் வெற்றி பெறும். 200614 காலகட்டத்தில் கூட்டுறவு மருந்து கடைகள் என்ற பெயரில் அப்போதைய முதல்வர் மு.கருணாநிதி தொடங்கி வைத்தார். இதன் தொடர்ச்சியாக தான் அதிமுக ஆட்சியில் அம்மா மருந்தகங்கள் அமைக்கப்பட்டன. அவை இடையூறின்றி செயல்படும். இவை கூட்டுறவு துறையால் நடத்தப்படுபவை. அங்கு வெளி சந்தையை விட 20 சதவீதம் மலிவான விலையில் மருந்துகள் விற்கப்படும்.

ஆனால், முதல்வர் மருந்தகத்தில் தமிழ்நாடு மருந்துகள் சேவை கழகத்தின் ஜெனரிக் மருந்துகளும், கூட்டுறவுத் துறையின் பிராண்டட் ஜெனரிக் மருந்துகளும் மிகக் குறைந்த விலையில் விற்கப்படும். ஜெனரிக், பிராண்டட் மருந்துகளுக்கான மூலக்கூறு ஒன்று என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதே நேரம், முதல்வர் மருந்தகத்தின் மருந்துகள் அனைத்தும் 2 கட்ட தரப் பரிசோதனைக்கு பிறகே விற்கப்படுகிறது. அரசு மருத்துவமனைகள், மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் தொடர்ந்து செயல்படும். மத்திய அரசு ஊழியர்களுக்கான கட்டணமில்லா மருந்து விற்பனையை நிறுத்திவிட்டு, லாபம் சம்பாதிக்கும் நோக்கில் மத்திய அரசின் மருந்தகம் தொடங்கப்பட்டது. ஆனால், ஏழை மக்களுக்கு கட்டணமில்லா மருந்துகள் அரசு மருத்துவமனை மூலம் வழங்கிவிட்டு, நடுத்தர மக்களுக்கு 75 சதவீதம் வரை தள்ளுபடி விலையில் முதல்வர் மருந்தகம் மூலம் மருந்துகள் வழங்கப்படுகிறது.

மத்தியில் மருந்து கொள்முதலுக்கு 14 நாட்களாகும். இங்கு 48 மணி நேரத்துக்குள் வழங்கப்படுகிறது. அங்கு வெளிச்சந்தையிலும் மருந்துகள் கொள்முதல் செய்யப்படுகின்றன. முதல்வர் மருந்தகத்தில் அரசு நிறுவனங்களிடம் இருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படும். எடுத்துக்காட்டாக நீரிழிவுக்கான (மெட்ஃபார்மின்) 30 மாத்திரை முதல்வரின் மருந்தகத்தில் ரூ.11க்கும், மத்திய அரசு மருந்தகத்தில் ரூ.30க்கும், தனியார் மருந்தகத்தில் ரூ.70க்கும் விற்கப்படும். இவ்வாறு மத்திய அரசின் மருந்தகத்தை விட 20 சதவீதம் வரை குறைந்த விலையில் முதல்வர் மருந்தகத்தில் மருந்துகள் விற்கப்படுகிறது. இங்கு 762 மருந்து வகைகள், அறுவை சிகிச்சைக்கான சில உபகரணங்கள், டாம்பகால் உள்ளிட்ட சித்த மருந்துகள் போன்றவை விற்கப்படும். சுகாதாரமும் கல்வியும் மாநில பட்டியலில் இருந்தால் மட்டுமே முழுமையாக துறை சார்ந்த திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்ல முடியும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## "அனைத்து தேர்தல்களிலும் அதிமுக தோல்வியை சந்திக்க ஒற்றைத் தலைமையே காரணம்" : ஓபிஎஸ் குற்றச்சாட்டு

சென்னை, பிப்.25

"அனைத்து தேர்தல்களிலும் அதிமுக தோல்வியை சந்திக்க ஒற்றைத் தலைமையே காரணம். ஒற்றைத் தலைமையை ஏற்றுக் கொண்டவர்களே தொடர் தோல்விக்கு காரணம்." என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை முன்னாள் முதல்வர் ஓபிஎஸ் கடுமையாக சாடினார்.



மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 77வது பிறந்தநாள் விழா இன்று கொண்டாடப்படுகிறது. இந்த விழாவை முன்னிட்டு, சென்னை காமராஜர் சாலையில் உள்ள ஜெயலலிதாவின் சிலைக்கு, ஓபிஎஸ் மரியாதை செலுத்தினார். இதனையடுத்து, அவர் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

அப்போது அவர், "ஜெயலலிதா இருந்தவரை கட்சியை எந்தளவுக்கு நிலைநிறுத்தினார் என்பது எல்லோருக்கும் தெரியும். அதற்கு பின்னால் நடைபெற்ற அரசியல், சூது, சூழ்ச்சி, நம்பிக்கை துரோகம் இதெல்லாம் யாரால் அரங்கேற்றப்பட்டது என்பதும் எல்லோருக்கும் தெரியும். இதனிடையே நடைபெற்ற 11 தேர்தல்களிலும் கழகம் தோல்வியைத்தான் சந்தித்தது. இதற்கெல்லாம் காரணம், ஒற்றை தலைமைதான் வேண்டும் என்று அடம்பிடித்து அதை ஏற்றுக்கொண்டவர்கள்தான். அவர்கள்தான் இதற்கு பதில் சொல்ல வேண்டும்.

வசந்த காலமாக இருந்த ஜெயலலிதாவின் ஆட்சிக்காலத்தை, இன்றைக்கு மாற்றி இருக்கிறவர்கள் யார் என்று உங்களுக்கே நன்றாகவே தெரியும். அவர்களுடைய பெயர்களை நான் வருங்காலத்தில் தவிர்க்க வேண்டிய சூழல் இருக்கிறது. பொதுமக்களும் அதையே நம்மிடம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழக மக்கள் விரும்புவது இரு மொழிக் கொள்கை தான். ஜெயலலிதா அதை தீர்மானமாக சட்டமன்றத்தில் நிறைவேற்றினார். எங்களுடைய நிலைப்பாடும் இருமொழிக் கொள்கை தான். மாநில நிதியாக இருந்தாலும் சரி, மத்திய நிதியாக இருந்தாலும் சரி அது மக்களுடைய வரிப் பணம். இது தொண்டர்களின் இயக்கம்.

தொண்டர்களுடைய விருப்பம் கட்சி இணைய வேண்டும் என்பதுதான். தொண்டர்களின் எண்ணம் ஈடேற வேண்டும் என்பதற்காக தான் நாங்களும் தர்மயுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். நமது தாய் மொழியை காப்பாற்ற வேண்டிய கடமை நமது ஒவ்வொருவருக்கும் இருக்கிறது." என்று கூறினார்.

## 'அதிமுக ஆட்சியில் பெண்கள் பாதுகாப்பாக இருந்தனர்' ஜெயலலிதா பிறந்தநாள் விழாவில் இபிஎஸ் பேச்சு

சென்னை, பிப்.25

"அதிமுக ஆட்சிக் காலத்தில் பெண்கள் பாதுகாப்பாக இருந்தனர். இன்றைக்கு பெண்கள் தொடர்ந்து பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகின்றனர். பெண் குழந்தைகள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகாமல் பாதுகாக்கப்பட வேண்டும். அத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டும்." என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.



முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 77வது பிறந்த நாளையொட்டி, அவரின் சிலைக்கு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர், சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் ஜெயலலிதா பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

அந்த விழாவில், எடப்பாடி பழனிசாமி பேசியதாவது: பெண் குழந்தைகள் படிக்கின்ற பள்ளிகளில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு நல்ல ஆலோசனைகள் வழங்கி இனி பெண் குழந்தைகளுக்கு எவ்வித பாலியல் வன்கொடுமைக்கும் ஆளாகாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என இந்த அரசுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டும். அதிமுக ஆட்சிக் காலத்தில் பெண்கள் பாதுகாப்பாக இருந்தனர்.


இன்றைக்கு தொடர்ந்து பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாவதை இந்த அரசு முற்றுப்புள்ளிவைக்க வேண்டும். சிறுமிகளுக்கும், பெண்களுக்கும் தகுந்த பாதுகாப்பு வழங்க வேண்டும். ஜெயலலிதா ஆட்சியில் இருந்த போது பெண்களுக்காவும், அவர்களுடைய வளர்ச்சிக்காகவும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. பல வகையிலும் பெண்களுக்கு உதவிகரமாக இருந்த அரசு, அதிமுக அரசு என்பதை இந்த நேரத்தில் நினைவுகூர்கிறேன்.

பெண் குழந்தை பிறந்தால் எதிர்காலத்தில் குடும்பம் பாதிக்கப்படும் என்று பிறந்தவுடன் கள்ளிப்பால் கொடுத்து கொடூரமாக கொலை செய்யும் செயல்களிலிருந்து தடுத்தவர் ஜெயலலிதா. அவர்தான் தொட்டில் குழந்தை திட்டத்தை தமிழகத்தில் உருவாக்கினார். மகப்பேறு நிதி உதவி திட்டம், தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம், சானிடரி நாப்கின் வழங்கும் திட்டம், பெண்களுக்கான உடல் எடை பரிசோதனை செய்யும் திட்டம், மகளிர் சுய உதவி குழு திட்டம், அம்மா இருசக்கர வாகன திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை உருவாக்கிக் கொடுத்தவர் ஜெயலலிதா." என்றார்.

## அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கு சிறப்பு புலனாய்வு குழு குற்றப்பத்திரிகை தாக்கல்

சென்னை, பிப்.25

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில், ஞானசேகரன் மீது சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் சிறப்பு புலனாய்வு குழு ஆன்லைன் வாயிலாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.



சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் சென்னை கோட்டூர்புரத்தைச் சேர்ந்த ஞானசேகரன் என்பவர் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கை விசாரிக்க, சென்னை உயர் நீதிமன்ற வழிகாட்டுதல்படி 3 பெண் ஐபிஎஸ் அதிகாரிகள் தலைமையில் சிறப்பு புலனாய்வு குழு (எஸ்ஐடி) அமைக்கப்பட்டது. அந்த குழுவினர் மாணவி பாலியல் விவகாரம் மற்றும் அது தொடர்பான முதல் தகவல் அறிக்கை (எப்ஐஆர்) வெளியான விவகாரம் குறித்து தனித்தனியாக விசாரித்து வருகின்றனர்.

இந்த நிலையில் ஞானசேகரன் மீது சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் சிறப்பு புலனாய்வு குழுவினர் ஆன்லைன் வாயிலாக முதல்கட்ட குற்றப் பத்திரிகையை இன்று (பிப்.24) தாக்கல் செய்துள்ளனர். மாணவி பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் ஞானசேகரனுக்கு மட்டுமே தொடர்பு உள்ளது என அந்த குற்றப்பத்திரிகையில் போலீஸார் தெரிவித்துள்ளனர். மேலும் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், ஞானசேகரனின் செல்போன் உரையாடல்கள் அனைத்தும் குற்றப்பத்திரிகையில் இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

முன்னதாக ஞானசேகரன் செல்போனில் பேசிய ஆடியோ ஆதாரங்களை, உறுதி செய்யும் வகையில் அவருக்கு சென்னை மெரினா கடற்கரை கலங்கரை விளக்கம் எதிரே உள்ள அரசு தடயவியல் துறை கூடத்தில் 3 மணிநேரம் குரல் பரிசோதனை செய்யப்பட்டது. பின்னர் அவர் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார்.

தொடர்ந்து அவருக்கு அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் ரத்த பரிசோதனை நடத்தப்பட்டது. குரல் பரிசோதனை போன்று ரத்த பரிசோதனையும் பாலியல் வன்கொடுமை வழக்கில் முக்கிய தடயமாக பார்க்கப்படுகிறது. அனைத்து கோணங்களிலும் விசாரணை நடத்தி வரும் சிறப்பு புலனாய்வுக் குழு, மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் தற்போது முதல்கட்ட குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர்.

## ஆடு, ஓநாய் ஒன்றுபட்டு இருக்க முடியாது - இபிஎஸ் கருத்துக்கு பதில் அளிக்க செங்கோட்டையன் மறுப்பு

ஈரோடு, பிப்.25

'ஆடு, ஓநாய் ஒன்றுபட்டு இருக்க முடியாது என்ற அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமியின் கருத்து குறித்து அவரிடமே கேட்டுக் கொள்ளுங்கள்' என்று முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்தார்.




முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 77வது பிறந்தநாளை ஒட்டி, ஈரோடு மாவட்டம் கோபியில் நடந்த நிகழ்ச்சிகளில் முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் பங்கேற்றார். அவரது தலைமையில் அதிமுக நிர்வாகிகள் ஜெயலலிதாவின் படத்துக்கு மலர் அஞ்சலி செலுத்தி இனிப்பு வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து செங்கோட்டையன் செய்தியாளர்களிடம் பேசியதாவது "அதிமுக பொதுச்செயலாளர், எதிர்கட்சித்தலைவரின் ஆணைப்படி, ஜெயலலிதா பிறந்தநாள் பொதுக்கூட்டம் கோபியில் நடைபெறுகிறது. பொதுவாக, ஜெயலலிதாவின் நினைவு நாளில், அனைவரும் சென்னை சென்று அஞ்சலி செலுத்துவோம். இந்த முறை ஜெயலலிதா பிறந்தநாளை, அந்தந்த பகுதிகளில் மக்களை உற்சாகப்படுத்தும் வகையில் கொண்டாடி வருகிறோம்" இவ்வாறு செங்கோட்டையன் தெரிவித்தார்.

'ஆடு, ஓநாய் ஒன்றுபட்டு இருக்க முடியாது என இபிஎஸ் கூறியது' குறித்து' செய்தியாளர்கள் கேட்டபோது, 'ஆடு, ஓநாய் குறித்து அவர் சொல்லியிருக்கிறார். அவரிடம் கேட்டுக் கொள்ளுங்கள்' என்று செங்கோட்டையன் பதில் அளித்தார்.

இதனைத் தொடர்ந்து அரசு போக்குவரத்துக்கழக பணிமனை பகுதியில் நடந்த ஜெயலலிதா பிறந்தநாள் நிகழ்ச்சியில் செங்கோட்டையன் பேசுகையில், "அதிமுக அசைக்க முடியாத ஒரு சக்தி என்பதை நாடு அறியும், 2026 சட்டமன்றத் தேர்தலில் முன்னாள் முதல்வர்கள் எம்ஜிஆர், ஜெயலலிதா நல்லாசியுடன் சிறந்த ஆட்சியை தமிழகத்தில் தரப்போகிறோம். போக்குவரத்து கழகத்தில் பல்வேறு கோரிக்கைகள் வைத்தாலும் கூட திமுக ஆட்சியில் எந்த விதமான கோரிக்கைகளும் நிறைவேற்றப் படவில்லை. அனைத்து கோரிக்கைகளும் எதிர்காலத்தில் நிறைவேற்றப் படும்" இவ்வாறு அவர் பேசினார். கடந்த சில நாட்களாக இபிஎஸ் பெயரை உச்சரிப்பதைத் தவிர்த்து வரும் செங்கோட்டையன், ஜெயலலிதா பிறந்தநாள் நிகழ்ச்சியிலும் அவர் பெயரை உச்சரிக்காதது குறிப்பிடத்தக்கது.



தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே வடுகபட்டி பேருந்து நிறுத்தத்தில் அஇஅதிமுக வடுகபட்டி பேரூர் கழகம் சார்பில் தமிழ்நாடு முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களின் 77 வது பிறந்தநாள் விழாவை பேரூர் கழக செயலாளர் பாலமுருகன் தலைமையில் இனிப்பு வழங்கி கொண்டாடினர். இந்நிகழ்ச்சிக்கு பெரியகுளம் (கி) ஒன்றிய செயலாளர் ராஜகுரு, ஒன்றிய அவைத்தலைவர் முத்துச்சாமி, அம்மா பேரவை ஒன்றிய செயலாளர் சபரி பரமன், ஒன்றிய எம்.ஜி.ஆர் இளைஞரணி செயலாளர் மணிமாறன், ஒன்றிய மாணவரணி செயலாளர் பாலசுப்பிரமணியன்,பேரூர் கழக அவைத்தலைவர் பெத்தணசாமி, துணைச்செயலாளர் பாலையா, பொருளாளர் வெற்றிவேல், மாவட்ட பிரதிநிதி ராஜேந்திரன், வார்டு கழக செயலாளர்கள் சௌந்தர பாண்டியன், திரிசங்கு, பழனிவேல், முத்திருளன் உள்பட மாவட்ட ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூட்டுறவுத்துறையின் மூலம் முதல்வர் மருந்தகங்களை துவக்கி வைத்ததையொட்டி, இராமநாதபுரம் நகரில் உள்ள முதல்வர் மருந்தக விற்பனை மையத்தில் பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் குத்துவிளக்கேற்றி வைத்து முதல் விற்பனையை துவக்கி வைத்து பார்வையிட்டார். மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் ஆகியோர் உடன் இருந்தனர்..

# சிவகங்கையில் போலி ஆவணம் மூலம் பத்திரப்பதிவு நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியரிடம் மனு

சிவகங்கைபிப்.25

சிவகங்கை மாவட்டம் காஞ்சிரங்கால் பகுதியில் வசிக்கும் தென்னரசு என்பவர் தனக்கு சொந்தமான நிலத்தை போலி ஆவணங்கள் மூலம் பத்திரப்பதிவு செய்துள்ளதாக வும் அதை ரத்து செய்துநட வடிக்கை எடுத்து உதவிடுமாறு சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித்திடம் மனு அளித்தார்

அம்மனுவில் மேலும் கூறியிருப்பதாவது




காஞ்சிரங்கால் கிராமத்தில் வசிக்கும் எனக்கு சொந்தமாக உள்ள நிலத்தை எங்கள் குடும்பத்தில் உள்ள 2 நபர்கள் இறந்ததாக போலி சான்றிதழ் பெற்று அதன்படி பத்திரப்பதிவு அலுவலகத்தின் மூலம் போலிபத்திரம் தயாரித்து உள்ளனர் இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் ஆளும் கட்சி பிரமுகராக இருப்பதால் நடவடிக்கை அதிகாரிகள் எடுக்க தயங்குகின்றனர் என்றார்.

மேலும் இது சம்பந்தமாக என்னை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கக் கூடாது எனவும் தவறும் பட்சத்தில் கொலை செய்து விடுவோம்! என கொலை மிரட்டல் விடுத்த வருகின்றனர் தான் தரும் 5,00,000 ரூபாயை பெற்றுக் கொண்டு ஒதுங்கிக் கொள்ளுமாறு மிரட்டுகின்றனர்.

போலி சான்றிதழ் மூலம் பத்திரப்பதிவு செய்ததை ரத்து செய்தும், போலி ஆவணம் உருவாக்கிய துணை வட் டாட்சியர் மற்றும் பத்திரப்பதிவு செய்த பதிவாளர் உள்ளிட்டோர் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து போலி பத்திரத்தை ரத்து செய்ய உதவிடுமாறு அம் மனுவில் குறிப்பிட்டு இருந்தது.





தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் தமிழக பாரம்பரிய விளையாட்டு ஆன சிலம்பம் மற்றும் வில்வித்தை போட்டிகள் ஸ்ரீ சாய் அகாடமி ஆஃப் மார்ஷியல் ஆர்ட்ஸ் நடத்தும் கடந்த 2302 2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குமேல் பங்கஜம் நடுநிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் போட்டிகள் நடைபெற்றது. இப்போட்டியில் வெளியூர் மாணவர் மாணவிகள் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியின் தலைவர் .சரவணநதி, செயலாளர் .மணிமண்ணன், பொருளாளர் .பார்த்திபன் மற்றும் நிறுவனத் தலைவர் . ஜெயசீலன் ( சாய் அகாடமி ஆஃப் மார்ஷியல் ஆர்ட்ஸ்) ஒருங்கிணைப்பாளர் .விமலா தேவி ஆகியோர்களும், அரசியல் பிரமுகர்களும் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கினர். இப்போட்டியில் ஊர் பொதுமக்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

# செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் தெற்கு பகுதி தேமுதிக சார்பில் 25 ஆண்டு வெள்ளி விழாவை முன்னிட்டு கொடியேற்றுதல் நிகழ்ச்சி

தாம்பரம் பிப்25



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் தெற்கு பகுதி தேமுதிக சார்பில் 25 ஆம் ஆண்டு வெள்ளி விழாவை முன்னிட்டு சுமார் மூன்று இடத்தில் கொடி ஏற்றும் நிகழ்ச்சி சிறப்புடன் நடைபெற்றது.

தாம்பரம் தெற்கு பகுதி செயலாளர் கேட்.எம்.தர்மா தலைமையில் 64வது வட்டச் செயலாளர் ஆர்.கன்னியப்பன், முன்னாள் வட்ட செயலாளர் ஆர்.கமல், அவைத்தலைவர் சங்கர், கலைவாணி, ஆறுமுகம், தெற்கு பகுதி இளைஞரணி செயலாளர் விஷ்ணு 64வது வார்டு வட்ட துணை செயலாளர் விக்னேஸ்வரன் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மாவட்ட துணை செயலாளர் மா.செழியன் கலந்துகொண்டு சுமார் மூன்று இடத்தில் கொடி ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்கள் இந்த நிகழ்ச்சியில் செங்கல்பட்டு மாவட்ட மகளிர் அணி செயலாளர் பார்த்திமா ஸ்டெல்லா, மாவட்ட வழக்கறிஞர் அணி துணைச் செயலாளர் சுஜாதா நந்தினி, தாம்பரம் தெற்கு பகுதி துணைச் செயலாளர்கள் ஏழுமலை, தமிழரசு மாவட்ட பிரதிநிதிகள் பாலமுருகன், வீரப்பன், மத்திய பகுதி துணைச் செயலாளர் சதீஷ்குமார், தாம்பரம் தெற்கு பகுதி கேப்டன் மன்ற செயலாளர் டாக்டர் நெருப்பு ராஜேந்திரன், தெற்கு பகுதி மகளிர் அணி செயலாளர் டாக்டர் சுமதி, துணைச் செயலாளர் திலகா, வட்டச் செயலாளர்கள் கே.குமார், ராசிமகேந்திரன், காந்தி, நாகூர் மீரான், சங்கர், ஏழுமலை, முருகன், விக்கி, தாம்பரம் தெற்கு பகுதி நிர்வாகிகள் வட்ட கழகச் செயலாளர்கள் வட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர் அதனைத் தொடர்ந்து 64வது வட்டச் செயலாளர் ஆர்.கன்னியப்பன் ஏற்பாட்டில் அவர்களுடைய இல்லத்தில் ஆலோசனைக் கூட்டம் மிக சிறப்பாக நடைபெற்றது இந்த கூட்டத்தில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..

# சேலையூரில் ஜெ. பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் மருத்துவ முகாம்

சேலையூர் பிப்25





செங்கல்பட்டு மாவட்டம் தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 77வது பிறந்த நாளை முன்னிட்டு, நேற்று மேற்கு மாவட்ட கழகம் சார்பில், மாவட்ட இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை பொருளாளர் ஆர். சங்கர்கணேஷ் ஏற்பாட்டில், மாடம்பாக்கம் பகுதி கழகச் செயலாளர் எம். தேவேந்திரன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் இலவச மருத்துவ முகாமை, கழக மருத்துவ அணி செயலாளர் டாக்டர் பி. வேணுகோபால், மாவட்ட கழகச் செயலாளர் சிட்லபாக்கம் ச. ராசேந்திரன், முன்னாள் அமைச்சர் டி.கே. எம். சின்னையா ஆகியோர் துவக்கி வைத்தனர். மாவட்ட அவைத் தலைவர் பொன்னுசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.தன்சிங், கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் கே.எஸ்.மலர்மன்னன், தாம்பரம் மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் சேலையூர் ஜி. சங்கர், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் கே. பி. காசி ராஜபாண்டியன், மாவட்ட மருத்துவர் அணி செயலாளர் ஆர். பாலாஜி ஸ்ரீகாந்த், காஞ்சி மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு இணை செயலாளர் சபரிஷ் மணிகண்டன், பகுதி கழக செயலாளர்கள் எம். கூத்தன், பம்மல் பா அப்பு(எ) வெங்கடேசன், இரா. மோகன், எல்லார் செழியன், அனகை பி. வேலாயுதம், மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளர் ஜி. எஸ். புருஷோத்தமன், ஜி.எம் சாந்தகுமார், மாமன்ற உறுப்பினர் அ. கிருஷ்ணமூர்த்தி, விஜயநாராயணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகாலத்திற்குள் நகராட்சி சார்பில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுவதற்கு மேற்கொள்வதற்கு ஜே சி பி இயந்திரம் வந்த பொழுது ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் நகராட்சி ஊழியர்கள் இடையே பெரும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

# இளையான்குடி அஇஅதிமுக சார்பில் ஜெயலலிதா பிறந்த நாள் கொண்டாட்டம்

இளையான்குடி பிப்25







சிவகங்கை மாவட்டம் இளையான்குடி அஇஅதிமுக பேரூர் கழக செயலாளர் எம்.ஏ. நாகூர்மீரா தலைமையில் முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா வின் (பிப்24)77வது பிறந்தநாள் விழா நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து அஇஅதிமுக கழக கொடியினை மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் எஸ். நாகராஜன் , இளையான்குடி தெற்கு ஒன்றியக்கழக செயலாளர் அ. பாரதிராஜன் , மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு தலைவர், வடக்கு ஒன்றியக் கழக செயலாளர் கே.எம். கோபி ,மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் கே. குழந்தை , மாவட்ட எம்.ஜி.ஆர் மன்ற துணைத்தலைவர் எம்.எஸ். எம். அப்துல் குலாம் முன்னிலை வகித்தனர்.உடன் இளையான்குடி ஒன்றிய கழக நிர்வாகிகள் செல்வராஜ், குமார், சிவா, உதயா, கேசவன், குமரேசன், முருகேசன். இளையான்குடி பேரூர்கழக நிர்வாகிகள் அபுபக்கர், தாவூது பாட்சா, மீரான்கனி, தாஜ் மைதீன், செய்யதுஇபுறாகிம், அபுல்கலாம்ஆசாத், கீழாயூர் செய்யது, மீரா உசேன், அப்பாஸ்அலி, சிவக்குமார், இப்ராம்சா, முகம்மது கனிபா, ரபி முகம்மது, கலில்அஹமது, எம்.செல்வம், பூட்டுஅபுதாகிர், அப்துல்காதர், முகம்மதுமைதீன், அயூப்கான், திருநாவுக்கரசு, ஆறுமுகம், செய்யது அன்சாரி, யாசர் அலி, சிக்கந்தர் ஹம்சா அலி, அன்சாரலி, ஹைதர்அலி, தெய்வேந்திரன், ராஜேந்திரன், அலிஅக்பர், முகம்மதுபைசல், எல்.முருகன், இஸ்மத்இனூன், முகம்மதுபைசல், ஹாத்திம், முகம்மதுபாசித், ஜாவித், அரசேந்திரன், அசோக், செல்வக்குமார், தஸ்தகீர், முருகன், கதிரேசன், கிளி (எ) வேலு , பைசில் ரஹ்மான், சபீர் அகமது மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



மதுரை விளாங்குடி கலைஞர் திருடலில் மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதி கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது இதில் பத்திர பதிவுத்துறை அமைச்சர் மூர்த்திக்கு சோலை அழகுபுரம் பகுதி கழகப் பொருளாளர் பல்சர் ஜி பி மணிகண்டன் 80 வட்டக் கழகப் பிரதிநிதி ஏ பி மணிகண்டன் ஆகியோர் வீரவாள் பரிசளித்தனர்




கன்னியாகுமரி மாவட்டம்பெட்ரோல் நிலையங்களில் வாகனங்களுக்கு இஞ்சின் ஆயில் மற்றும் திட்டத்தை கைவிட வேண்டும்,மத்திய அரசு வழங்கும் காப்பீட்டுக்கு ஜிஎஸ்டி வரி விதிக்கப்படுவதை திரும்ப பெற வேண்டும், இருசக்கர தொழிலாளர்களுக்கு என தனி நல வாரியம் அமைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி குமரி மாவட்ட நேதாஜி இருசக்கர வாகன பழுது நீக்குவோர் நலச்சங்கம் மற்றும் தமிழ்நாடு இருசக்கர வாகன பழுது நீக்குவோர் தலைமை நலச் சங்கம் இணைந்து கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் நடைப்பெற்ற மாவட்ட பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றம்மேலும் இருசக்கர வாகனங்களின் உதிரிபாகக் கண்காட்சி நடைபெற்றதுஇந்த கண்காட்சியில் பல்வேறு வகையான இருசக்கர வாகனங்களுக்கு தற்போதுள்ள நவீன தொழில்நுட்பம் சார்ந்த உபகரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

## குவாரி குத்தகை உரிமம் கோரும் விண்ணப்பங்களை இணையதள வழியாக விண்ணப்பிக்கலாம்! திருப்பூர் ஆட்சியர்

திருப்பூர் பிப்22

திருப்பூர் மாவட்டத்தில் தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள் 1959 ன்படி சாதாரண கற்கள், மண், கிராவல் மற்றும் கிராணைட் போன்ற சிறுவகை கனிமங்கள் மற்றும் 31 வகையான சிறுகனிமங்களுக்கான குவாரி குத்தகை உரிமம் கோரும் விண்ணப்பங்கள் மற்றும் செங்கல் சூளை பதிவு சான்று பெறுவதற்கான விண்ணப்பங்களை நேற்று



முதல் (பிப்24) மின்னனு முறையில் இணையதள வாயிலாக மட்டுமே பெறப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்டவாறு சிறுகனிமங்களுக்கான குவாரி குத்தகை உரிமம் கோருவோர் ஷ்ஷ்ஷ்.னீவீனீணீ௳.மீஸீ.ரீஷீஸ்.வீஸீ என்ற இணையதளத்தில் பதிவுசெய்து விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்..

## கெங்குவார்பட்டி பேரூர் தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்; தங்க தமிழ்செல்வன் எம்.பி. பங்கேற்பு;




பெரியகுளம் பிப்25

தேனிமாவட்டம் பெரியகுளம் அருகே கெங்குவார்பட்டி எஸ்.பி.டிதிருமண மண்டபத்தில் பேரூர் தி.மு.க சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் பெரியகுளம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர் எல்.எம் பாண்டியன் தலைமையில் நடந்தது. சிறப்பு அழைப்பாளராக தேனி நாடாளுமன்ற உறுப்பினரும், தேனி வடக்கு மாவட்ட செயலாளருமான தங்க தமிழ்ச்செல்வன் கலந்து கொண்டு பேசுகையில் "வருகிற 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலில் 200 க்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெறுவோம்,ஒன்றிய பாஜக அரசு தமிழ்நாட்டு மக்களுக்கு பட்ஜெட்டில் தொடர்ந்து துரோகம் இழைத்து வருவதோடு ,மும்மொழி கொள்கை என்ற பெயரில் இந்தி திணிப்பை ஏற்படுத்த முயற்சி செய்து வருகிறது. இது தொடர்ந்தால் தமிழ்நாட்டில் மீண்டும் இந்தி எதிர்ப்பு போராட்டம் நடக்கும் என தலைமை அறிவித்துள்ளது. வருகிற மார்ச் 1 ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் பிறந்தநாளை மாவட்ட முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவோம்" என்று பேசினார். இந்நிகழ்ச்சியில் பெரியகுளம் சட்ட மன்ற உறுப்பினர் சரவணக்குமார், பெரியகுளம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் முத்துராமலிங்கம், பேரூர் கழக செயலாளர் தமிழன் , மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வழக்கறிஞர் ஸ்டீபன் உள்பட மாவட்ட, நகர, ஒன்றிய,பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## பாபா மெட்ரிக் பள்ளி பாபா கார்டன் பள்ளி ஆண்டுவிழா

மானாமதுரை பிப்25

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பாபா மெட்ரிக் பள்ளியில் 46 வது பரிசளிப்பு விழா மற்றும் ஆண்டு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக நமது பள்ளியின் நிறுவனர் அம்மா இராஜேஸ்வரி, அகஸ்டின் மார்டின்(காவல் துணை ஆய்வாளர்)மானாமதுரை காவல்நிலையம்,

கனரா வங்கி மேலாளர் ரம்யா கலந்துகொண்டனர்.இவ்வினிய விழாவில் மாணவர்களின் சிலம்பம்,யோகா, கராத்தே போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றது அதைத் தொடர்ந்து மாணவர்களுக்கு கராத்தே,யோகா,சிலம்பம் போன்றவற்றிக்கும் மற்றும் சிறப்பு பரிசுகளும் வழங்கப்பட்டது.

46வது ஆண்டு விழாவில் தலைமை விருந்தினராக முருகேசன் தொழிலதிபர் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக கிருஷ்ணகுமார்வட்டாட்சியர் ) மானாமதுரை ரவேந்திரன் (காவல் ஆய்வாளர்) மானாமதுரை காவல்நிலையம், .புவனேஸ்வரன் (தலைமையாசிரியர்)மேல்நிலைப்பள்ளி இடைக்காட்டூர்)) மற்றும் சிவபுராண செம்மல் முருகேசன் தமிழாசிரியர்(பேச்சாளர்) அரசு உயர் நிலைப்பள்ளி

கருப்புகுடிபட்டி, புதுக்கோட்டை மாவட்டம் ஆகியோர் கலந்து கொண்டனர்.மேலும் இந்த கல்வியாண்டு முழுவதிலும் முதல் மூன்று இடங்கள் பிடித்த மாணவர்களுக்கும், வருகையில் முதல் இடங்களை பிடித்த மாணவர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் கடந்தாண்டு நடைபெற்ற பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்கள் பிடித்த மாணவர்களுக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது.மேலும் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் அரங்கேறியது. சிறப்பு விருந்தினர்களுக்கு பள்ளியின் தாளாளர் கபிலன் பொன்னாடை அணிவித்து கௌரவப் படுத்தினார். பள்ளியின் நிர்வாகி மீனாட்சி நினைவுபரிசினை வழங்கினார்.

இவ்விழாவிற்க்கான ஏற்பாடுகளை பள்ளியின் முதல்வர் .சாரதா மற்றும் ஆசிரியர்கள் செய்திருந்தனர்.





திண்டுக்கல் மாவட்டம் பழனி சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார் தலைமையில் பழனி பெரிய பள்ளிவாசல் அருகே இருபத்தி மூணாவது வார்டில் ரூபாய் 45 லட்சம் மதிப்பீட்டில் புதிய துணை சுகாதார நிலையம் கட்டிடம் அமைக்க பூமி பூஜை நடைபெற்றது இவ்விழாவில் நகர் மன்ற தலைவர் நகர்மன்றத் துணைத் தலைவர் ஆணையர் நகர நல அலுவலர்கள் கட்சி பிரமுகர்கள் மாவட்ட நிர்வாகிகள் வார்டு கவுன்சிலர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்..

## தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாளை முன்னிட்டு 7777 பேருக்கு நலத்திட்ட உதவிகள் - பிரமாண்ட பொதுக்கூட்டம்

பெரியகுளம் பிப்.25

தேனிமாவட்டம் பெரியகுளம் அருகே கைலாசபட்டியில் தமிழ்நாடு முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 77 பிறந்தநாளை கொண்டாடுவது குறித்து ஆலேசனைக் கூட்டம் அஇஅதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக்குழு சார்பில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் சையதுகான் தலைமை தாங்கினார். முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் சிறப்புரையாற்றினார். மேலும் இந்த ஆலோசனை கூட்டத்தில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாள் விழாவை அதிக விளம்பர பதாகைகள் அமைத்து, ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் அன்னதானம் மற்றும்



இனிப்புகள் வழங்கி நலத்திட்ட உதவிகள் செய்ய வேண்டும் என்றும் விரைவில் மாபெரும் பொதுக்கூட்டம் நடத்தி 7777 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும் என்று பேசினர். இந்நிகழ்விற்கு முன்னாள் எம்.பிரவீந்திரநாத், அமைப்பு செயலாளர்கள் மஞ்சுளா, ராதா, மாவட்ட கழக துனைச் செயலாளர் முருகேசன் ஒன்றிய செயலாளர் செல்லமுத்து பெரியகுளம் நகர செயலாளர் அப்துல் சமது, மற்றும் மவட்ட கழக. ஒன்றிய கழக, நகர் கழக, பேரூர் கழக சார்பு அணி நிருவகிகள் உட்பட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## கம்பத்தைச் சேர்ந்த வர்களுக்கு கஞ்சா விற்றதாகஆந்திர வியாபாரி கைது

கம்பம் , 25

தேனி மாவட்டம், கம்பத்தைச் சேர்ந்த வர்களுக்கு கஞ்சா விற்றதாக ஆந் திர மாநிலத்தைச் சேர்ந்தவரை தனிப்படை போலீஸார் கைது செய்து, சனிக்கிழமை சிறையில் அடைத்தனர்.

கம்பம் வடக்கு காவல் நிலைய போலீஸார் கடந்த ஆண்டு, டிசம் பர் 4 ஆம் தேதி 4 கிலோ கஞ்சா பிடிபட்ட வழக்கில், 3 பேரைக் கைதுசெய்தனர். இவர்களில் இரு வரை குண்டர் தடுப்புச் சட்டத் தின் கீழ் சிறையில் அடைத்தனர்

இந்த நிலையில், 4 ஆவது குற்றவாளியான ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவரைப் பிடிக்க தேனி மாவட்ட காவல் கண்கா ணிப்பாளர் சிவபிரசாத் உத்தர வின் பேரில், உத்தமபாளையம் காவல் துணைக் கண்காணிப்பா ளர் செங்கோட்டு வேலவன் மேற் பார்வையில் ஆய்வாளர் பார்த்திபன் தலைமையில் தனிப் படை அமைக்கப்பட்டது. இவர்கள் ஆந்திர மாநிலம், கோதாவரி மாவட்டம், ராஜமுந் திரி அருகேயுள்ள கோவூரைச் சேர்ந்த நாகமணி (எ) பைப்பு ரெட்டி ராஜூவை (51) அங்குள்ள போலீஸார் உதவியுடன் பிடித் தனர். மேலும், அவர் வீட்டிலிருந்த 25 கிலோ கஞ்சாவைப் பறிமுதல் செய்து, அவரை கம்பம் காவல் நிலையத்துக்கு அழைத்து வந்தனர்

பிறகு, உத்தமபாளையம் குற்றவியல் நீதித்துறை நடுவர் மன்றத்தில் சனிக்கிழமை முன்னிலைப்படுத்தி சிறையில் அடைத்தனர். இதுகுறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத் கூறியதாவது,

ஆந்திர மாநிலத்திலிருந்து கம் பம், போடி, கூடலூர் ஆகிய பகு திகளுக்கு அதிகளவில் கஞ்சா கடத்தப்படுகிறது. தற்போது கம் பம் தனிப் படை போலீஸார் கஞ்சா விநியோகம் செய்ததாக ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த நாக மணியை கடந்த 10 நாள்களாக அந்த மாநிலத்திலேயே தங்கியி ருந்து கைது செய்தனர்

இதேபோல, கடந்த ஆண்டு, செப். 30 ஆம் தேதி 10.5 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்ட வழக்கில் இருவர் கைது செய்யப் பட்டனர்

இவர்களுக்கு கஞ்சா விநியோகம் செய்ததாக ஆந்திர மாநிலம்,



பைல்குடியைச் சேர்ந்த குல்லி பாபு மகன் செல்லி பாபு (எ) நாகேஸ்வரராவ் (35) என்பவரை யும், கடந்த ஆண்டு, அக்டோபர் 28ஆம் தேதி கஞ்சா எண்ணெய் கடத்திய வழக்கில் 5 பேரையும் போலீஸார் கைது செய்தனர்



நீலகிரி மாவட்டம் உதகை ஊராட்சி ஒன்றியம், தும்மனட்டி ஊராட்சியில் ரூ20.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மையத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு துறை சார்ந்த அரசு அதிகாரிகள் திமுக மாவட்ட செயலாளர் கே.எம். ராஜீ மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, கிளை கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# தாம்பரத்தில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட மருத்துவ முகாம்



தாம்பரம் பிப்25

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத்துறை சார்பில் மேற்கு தாம்பரம் கல்யாண் நகர் மாநகராட்சி அரசு உயர்நிலை பள்ளியில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட மருத்துவ முகாமை தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா துவக்கி வைத்தார்

உடன் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டல குழு தலைவர் டி.காமராஜ், தாம்பரம் மாநகராட்சி துணை ஆணையர் எஸ்.சசிகலா, மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி, பெரியநாயகம், வட்ட கழக செயலாளர் சஞ்சீவ், தாம்பரம் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜேஷ் சர்தார், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்..

# தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டலம் சார்பில் மக்கள் குறை தீர்க்கும் சிறப்பு முகாம்



தாம்பரம் பிப்25

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டலம் சார்பில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் சிறப்பு முகாமில் காஞ்சி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், மாண்புமிகு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மாற்று திறனாளிகளுக்கு நான்கு சக்கர வாகனம், பயனாளிகளுக்கு சத்துணவு, மருந்து பெட்டகங்களை வழங்கி மற்றும் பொது மக்களிடம் இருந்து குறைகள் மற்றும் கோரிக்கை மனுக்களை பெற்று கொண்டார் அதனை தொடர்ந்து அரசு ஆலுவலர்களிடம் மனுக்களை வழங்கி உரிய நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினார் இந்நிகழ்வில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ், தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகர துணை மேயர் கோ. காமராஜ், தாம்பரம் மாநகராட்சி ஆணையர், சீ.பாலசந்தர், மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன், பகுதி செயலாளர் ஆ.நடராஜன், தலைமை கழக பேச்சாளர் கி.வேல்மணி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள், வட்ட செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பொது மக்கள் பங்கேற்றனர்.



புதுக்கோட்டை திருமயம் கடியாப்பட்டியில் அதிமுக திண்ணை பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழக முன்னாள் வீட்டு வசதி வாரிய தலைவர் பி கே . வைரமுத்து வருதம் தெரிவித்தார் .தமிழக முன்னாள் அதிமுக சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் இருக்கும் போது இந்த நிலை இல்லை என்றும் வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் தமிழக முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி யார் 8வது முறையாக நிச்சயம் முதலமைச்சராக வெற்றி பெறுவார் அதற்கு நீங்கள் எல்லாம் ஒத்துழைப்பு தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.



சிவகங்கை மாவட்டம், சிவகங்கை ஏ.கே.ஆர்.நகர் பகுதியில் அமைந்துள்ள ''முதல்வர் மருந்தகத்தில்'' மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், விற்பனையை தொடங்கி வைத்து சிறப்பித்தார். உடன் இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) இராஜேந்திர பிரசாத், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார் மற்றும் துணைப் பதிவாளர்கள் உட்பட பலர் உள்ளனர்.



மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண்..28 கோரிப்பாளையம் பொன்முடியார் மாநகராட்சி பெண்கள் மேனிலைப்பள்ளியில் மேயர் இந்திராணி பொன்வசந்த் திடீர் ஆய்வு மேற்கொண்டு மாணவிகளிடம் கல்வி மற்றும் பொது அறிவு குறித்து கேட்டறிந்தார் அருகில் துணை மேயர் தி.நாகராஜன், மண்டலத் தலைவர். சரவணபுவனேஸ்வரி, மாமன்ற உறுப்பினர் உமா ஆகியோர் உள்ளனர்.



கன்னியாகுமரி மாவட்டம் முத்து நியுரோ சென்டர். சுங்கான் கடை,புனித அந்தோனியார் அருட் பணி பேரவை குருசடி, மேரிஸ் அறக்கட்டளை குருசடி இணைந்து நடத்திய மாபெரும் இலவச மருத்துவ முகாம் குருசடி புனித அந்தோணியார் ஆலயவளாகத்தில் ஆலய பங்குத்தந்தை அருட்பணி பெர்பெச்சுவல் ஆன்றனி குத்துவிளக்கு ஏற்றி ஆரம்பித்து வைக்க நாகர்கோவில் மாநகராட்சி துணைமேயர் ம.மேரி பிரின்சி லதா முன்னிலையில் அருட்பணி பேரவை செயலாளர் ரமணி ஜெலிஸ்கலந்து கொள்ள சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மேரீஸ் அறக்கட்டளை நிர்வாகிகள் தே.அமலராஜா. கலிஸ்டஸ்,மேரி ஷோபா,மருத்துவக் குழு மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்..

# போடிநாயக்கனூரில் தமிழ்நாடு முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 77வது பிறந்தநாள் விழா கொண்டாட்டம்

தேனி.பிப் 25

தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் பேருந்து நிலையம் அருகில் தேவர் சிலை முன்பு அஇஅதிமுக கழக சார்பில் தமிழ்நாடு முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களின் 77வது பிறந்தநாள் விழாவை போடி தெற்கு நகர கழகச் செயலாளர். மாரியப்பன் தலைமையிலும் வேல்முருகன் தெற்கு நகர துணை செயலாளர், ஆனந்தன் தேனி மேற்கு மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர், . செண்பகராஜன் நகர பொருளாளர், முனியம்மாள் நகர இணை செயலாளர், . செல்லகணேஷ் நகரத் துணைச் செயலாளர், பாண்டியராஜ் வடக்கு நகர இணைச் செயலாளர் ,இரும்பு கடை . ராமர் அவைத் தலைவர் ஆகியோர்கள் ஜெயலலிதாவின் திருஉருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.



போடி அரசு மருத்துவமனைக்கு சென்று உணவு பொருட்களையும் இனிப்புகளை வழங்கினர் மற்றும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட நகர, ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகளும் மற்றும் தொண்டர்களும் பொதுமக்களும் பலர் கலந்து கொண்டனர்.

# பல்லாவரத்தில் தேமுதிக 25 ஆம் ஆண்டு வெள்ளி விழாவை முன்னிட்டு பொதுகூட்டம்

பல்லாவரம் பிப் 25

பல்லாவரத்தில் தேமுதிக 25 ஆம் ஆண்டு வெள்ளி விழா முன்னிட்டு நடைபெற்ற பொதுகூட்டத்தில் தேமுதிக கழக கொடி அறிமுகபடுத்தபட்டு முதல் முதலாக அனகாபுத்தூர் பகுதியில் கொடி ஏற்றபட்டது என அனகை முருகேசன தெரி வித்தார்.

சென்னை அடுத்த பல்லாவரம் அம்பேத்கர் சிலை அருகே தேமுதிக கட்சி தொடங்கபட்டு 25 ஆம் ஆண்டு வெள்ளி விழா முன்னிட்டு பல்லாவரம் தொகுதியின் பகுதி செயலாளர் செந்தில்குமார் மற்றும் விஜயகுமார், கணேசன் தலைமையில் நடைபெற்றது. பொதுகூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கழக அவைத் தலைவர் இளங்கோவன், செங்கல்பட்டு மாவட்ட கழக செயலாளர் அனகை



முருகேசன், தலைமை கழக பேச்சாளர் தம்பி முருகன், முகிலரசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அனகை முருகேசன் பேசுகையில் தேமுதிக கொடி அறிமுகபடுத்தபட்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் அனகாபுத்தூர் பகுதியில் முதல் முதலாக ஏற்றபட்டது என தெரிவித்தார். இதனை தொடர்ந்து ஏழை, எளிய மக்களுக்கு நலதிட்ட உதவிகளான தையல் மிஷின், சேலைகள் வழங்கப்பட்டது இதில் மாவட்ட துணைச் செயலாளர் மா.செழியன், மாவட்ட மகளிர் அணி செயலாளர் பார்த்திமா ஸ்டெல்லா, பெருங்களத்தூர் பகுதி செயலாளர் அருள், தெற்கு பகுதி செயலாளர் கே.டி.எம் தர்மா, லோகநாதன், தமிழரசி, டி.ஏழுமலை, சுஜாதா நந்தினி, பாலமுருகன், கலா, ஆறுமுகம், ஏழுமலை, காந்தி ராஜ், மகேந்திரன், கன்னியப்பன், சந்தோஷ் குமார், சதீஷ்குமார், பல்லாவரம் வடக்கு, தெற்கு பகுதி கழக மற்றும் வார்டு கழக நிர்வாகிகள் உட்பட ஏராமனோர் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161